உதயநிதி ஸ்டாலினுக்கு எதிரான புகார் மனு: ஜார்ஜ்டவுன் நீதிமன்றம் பதிலளிக்க உத்தரவு

சென்னை, அக் . 13: வேட்புமனுவில் தவறான தகவல்களை அளித்ததாகக் கூறி, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிரான புகாரை விசாரணைக்கு எடுக்க எத்தனை நாள்கள் ஆகும்? என ஜார்ஜ்டவுன் நீதிமன்றம் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திருவல்லிக்கேணி-சேப்பாக்கம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உதயநிதி ஸ்டாலின், தனது வேட்புமனுவில் சொத்து விவரங்களை மறைத்துள்ளதால் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி அவரைத் தண்டிக்க வேண்டும் என தேனியைச் சேர்ந்த மிலானி சென்னை ஜார்ஜ்டவுன் நீதிமன்றத்தில் கடந்த செப்.8-ஆம் தேதி புகார் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை தாக்கல் செய்து, ஒரு மாதம் கடந்தும் அதை விசாரணைக்கு எடுக்கவில்லை. எனவே, அந்த மனுவை விசாரணைக்கு எடுக்க ஜார்ஜ்டவுன் நீதிமன்றத்துக்கு உத்தரவிட வேண்டும் எனக்கூறி, மிலானி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், எம்.பி., எம்எல்ஏக்களுக்கு எதிரான வழக்குகளை விரைந்து விசாரிக்கவே சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், செப்டம்பர் மாதம் அளித்த புகார் மனுவை இதுவரை கோப்புக்கு எடுக்கப்படவில்லை. மிகவும் செல்வாக்குமிக்க நபரான உதயநிதிக்கு எதிரான இந்த புகாரை விசாரணைக்கு எடுக்காதது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, மனுதாரர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுக்க எத்தனை நாள்களாகும் என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய, ஜார்ஜ்டவுன் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை அக்.15-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

ஆயுத பூஜைக்கு 14,963; தீபாவளிக்கு 15,659 சிறப்புப் பேருந்துகள்

அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அறிவிப்பு

சென்னை, அக். 13: ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகைகளை முன்னிட்டு, சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்குச் செல்லும் பொதுமக்களின் வசதிக்காக ஆயுத பூஜைக்கு 14,963 பேருந்துகளும், தீபாவளிக்கு 15,659 பேருந்துகளும் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.

சென்னை நந்தனத்தில் உள்ள மெட்ரோ நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இதற்கான சிறப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், அமைச்சர் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆயுத பூஜைக்கு 14,963 பேருந்துகள்: ஆயுத பூஜையை முன்னிட்டு, அக். 15 முதல் 18-ஆம் தேதி வரை சென்னையிலிருந்து வழக்கமாக இயக்கப்படும் 8,764 பேருந்துகளுடன் கூடுதலாக 6,199 சிறப்புப் பேருந்துகள் என மொத்தம் 14,963 பேருந்துகள் இயக்கப்படும். ஆயுத பூஜை முடிந்து அக். 20, 21 ஆகிய தேதிகளில் பல்வேறு ஊர்களிலிருந்து சென்னைக்கு 4,382 வழக்கமான பேருந்துகளுடன் 4,809 சிறப்புப் பேருந்துகள் என மொத்தம் 9,191 பேருந்துகள் இயக்கப்படும்.

தீபாவளிக்கு... தீபாவளியை முன்னிட்டு, நவ. 5 முதல் 7 வரை வழக்கமாக இயக்கப்படும் 6,573 பேருந்துகளுடன் கூடுதலாக 9,086 சிறப்புப் பேருந்துகள் என மொத்தம் 15,659 பேருந்துகள் இயக்கப்படும். தீபாவளி முடிந்து நவ. 9, 10 ஆகிய தேதிகளில் பல்வேறு ஊர்களிலிருந்து சென்னைக்கு 4,382 வழக்கமான பேருந்துகளுடன் 6,815 சிறப்புப் பேருந்துகள் என மொத்தம் 11,197 பேருந்துகள் இயக்கப்படும்.

பேருந்துகள் புறப்படும் இடங்கள்: கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோவை உள்ளிட்ட ஊர்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படும்.

கிளாம்பாக்கம் சி.எம்.டி.ஏ. காலனி பூங்கா அருகேயுள்ள தற்காலிகப் பேருந்து நிலையத்திலிருந்து வந்தவாசி, போளூர், திருவண்ணாமலை வழித்தடங்களிலும், மறைமலை நகர் தற்காலிகப் பேருந்து நிலையத்திலிருந்து கும்பகோணம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் வழித்தடங்களிலும் பேருந்துகள் இயக்கப்படும்.

கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை, காஞ்சிபுரம், வேலூர், பெங்களூரு, திருத்தணி வழித்தடங்களிலும், மாதவரம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திர மாநிலத்துக்கும் பேருந்துகள் இயக்கப்படும். மாதவரத்திலிருந்து வழக்கமாக இயக்கப்படும் திருச்சி, சேலம், கும்பகோணம், திருவண்ணாமலை பேருந்துகளும் இயக்கப்படும்.

14 முன்பதிவு மையங்கள்: கிளாம்பாக்கத்தில் 10, கோயம்பேட்டில் 2, மறைமலை நகரில் 2 என மொத்தம் 14 முன்பதிவு மையங்கள் செயல்படும். www.tnstc.in என்ற இணையதளம் மற்றும் டி.என்.எஸ்.டி.சி. கைப்பேசி செயலி மூலமாகவும் பயணிகள் முன்பதிவு செய்யலாம்.

வாகன ஓட்டிகளுக்கு அறிவுறுத்தல்: சொந்த வாகனங்களில் ஊர்களுக்குச் செல்வோர் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க தாம்பரம், பெருங்களத்தூர் வழியாகச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக பழைய மாமல்லபுரம் சாலை, கேளம்பாக்கம், திருப்போரூர், செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிவட்டச் சாலை, கேளம்பாக்கம், திருப்போரூர், செங்கல்பட்டு வழித்தடங்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

24 மணி நேரக் கட்டுப்பாட்டு அறை: அரசுப் பேருந்துகளின் இயக்கம் தொடர்பான விவரங்கள், புகார்களுக்கு 94450 14436, கட்டணமில்லா எண் 149 ஆகிய எண்களைத் தொடர்புகொள்ளலாம்.

ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பது உள்ளிட்ட புகார்களை 1800 425 6151 என்ற கட்டணமில்லா எண்ணிலும், 93848 08333 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிலும் தெரிவிக்கலாம். கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் 24 மணி நேரக் கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்காகக் கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படுவதுடன், காவல் துறை, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், போக்குவரத்துத் துறை அலுவலர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவர். கூட்ட நெரிசலின்போது கைப்பேசி இணைப்பு தடையின்றிக் கிடைக்கத் தற்காலிகத் தகவல் தொடர்புக் கோபுரங்களும் அமைக்கப்படும். கூடுதல் புறநகர் மின்சார ரயில்களையும், கோவை, தென் மாவட்டங்கள், டெல்டா பகுதிகளுக்குச் சிறப்பு ரயில்களையும் இயக்க ரயில்வே நிர்வாகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இணைப்புப் பேருந்துகள்: கிளாம்பாக்கத்திலிருந்து மறைமலை நகர் தற்காலிகப் பேருந்து நிலையத்துக்கு இலவச இணைப்புப் பேருந்துகள் இயக்கப்படும். கோயம்பேட்டில் இருந்து கிளாம்பாக்கத்துக்கு 24 மணி நேரமும் இணைப்புப் பேருந்துகள் இயக்கப்படும்.

ஆம்னி பேருந்துகளுக்கு...: ஆம்னி பேருந்து உரிமையாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், பேருந்துகள் இயக்கப்படும் இடங்கள் குறித்தும், கூடுதல் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பயணக் கட்டணங்களைக் குறைப்பது குறித்து உரிய முடிவெடுப்பதாகத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர் என்றார் அவர்.

அரசு மருத்துவமனையில் ஊழல் தடுப்புத் துறை சோதனை: ரூ.20 ஆயிரம் பறிமுதல்



தஞ்சாவூர் அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் செவ்வாய்க்கிழமை விசாரணை மேற்கொண்ட ஊழல் தடுப்பு பிரிவு காவல்துறையினர்.

தஞ்சாவூர், அக். 13: தஞ்சாவூர் அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் கர்ப்பிணிகள், உறவினர்களிடம் பணியாளர்கள் லஞ்சம் வாங்குவதாக எழுந்த புகார்களைத் தொடர்ந்து, ஊழல் தடுப்பு காவல் பிரிவினர் செவ்வாய்க்கிழமை நடத்திய திடீர் சோதனையில் கணக்கில் வராத ரூ. 20 ஆயிரத்து 40 பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த மருத்துவமனையிலுள்ள மகப்பேறு சிகிச்சை பிரிவில் கர்ப்பிணிகளைப் பார்க்க வரும் உறவினர்களிடம் மருத்துவமனைத் தூய்மைப் பணியாளர்கள், காவலாளிகள், உதவியாளர்கள் உள்ளிட்டோர் ரூ. 50 முதல் ரூ. 100 வரை லஞ்சம் வாங்குவதாகவும், ஆண் குழந்தை பிறந்தால் ரூ. 1,000, பெண் குழந்தை பிறந்தால் ரூ. 500, கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவி செய்ய ரூ. 200 வசூலிக்கப்படுவதாகவும், இதனால் பொதுமக்கள் பல்வேறு வகைகளில் மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் புகார்கள் எழுந்தன.

இதன் அடிப்படையில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு காவல் துணைக் கண்காணிப்பாளர் அன்பரசன் தலைமையில் ஆய்வாளர்கள் பத்மாவதி, சரவணன், அருண் பிரசாத் உள்ளிட்டோர் அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவிலிருந்து திடீர் சோதனை மேற்கொண்டனர். அப்போது, நிரந்தர, ஒப்பந்த பணியாளர்களைத் தனித்தனியாக அழைத்து சுமார் 6 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

இதில், நிரந்தர உதவியாளர்கள், ஒப்பந்தப் பணியாளர்கள் என மொத்தம் 8 பேரிடம் கணக்கில் வராத ரூ. 20 ஆயிரத்து 40 பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக தொடர்ந்து விசாரிக்கின்றனர்.

Chola

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: 1வது தளம், எண்.42, பச்சையப்பன் தெரு, காஞ்சிபுரம் - 631501
தொடர்பு எண்: திரு. தியாகராஜன் - மொபைல் எண். 9940516215 & திரு. சிவசண்முகம் - மொபைல் எண்.9962614785

அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரருக்கு / கூட்டுக் கடன்தாரருக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்படும் அசையாச் சொத்துக்கள் இனி இங்கு **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** எனக் குறிப்பிடப்பட உள்ள **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **அடையாள/நேரடி சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளன. இந்தக் கடனீட்டுச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் E-ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும். மேலும் இதன் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் இதற்காக https://bankauctions.in இணையத்தளத்தில் நாங்கள் பொது E-ஏலம் நடத்த உள்ளோம்.

கடன் கணக்கு எண். HE01HIR00000075253, **கடன்தாரர், கூட்டு கடன்தாரர் மற்றும் அடமானதாரர்களின் பெயர்:** 1. திருமதி. டி.ஜி. ராணி, (காலஞ்சென்ற டி. கே. ஞானசேகரின் சட்டப்பூர்வ வாரிசு மற்றும் மனைவி), 2. M/S. டி.ஜி.ஆர். டெக்ஸ்டைல்ஸ் (அதன் உரிமையாளர் ஞானசேகரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது), 3. திரு. டி.ஜி. இளையராஜா, (காலஞ்சென்ற டி. கே. ஞானசேகரின் சட்டப்பூர்வ வாரிசு மற்றும் மகன்), 4. டி.ஜி. ஐயப்பன், (காலஞ்சென்ற டி. கே. ஞானசேகரின் சட்டப்பூர்வ வாரிசு மற்றும் மகன்), எண்.2/6A, தங்க சாலை தெரு, பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு தாலுகா, திருவள்ளூர் - 631208.; **பிரிவு 13(2)-ன் கீழான கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை:** 27-06-2026 மற்றும் 27-06-2026 அன்றைய நிலவரப்படி ரூ.49,86,537/-; **சொத்து/சொத்துகளின் விவரங்கள்:** காலஞ்சென்ற திரு. டி. கே. ஞானசேகருக்கு (விண்ணப்பதாரர்) சொந்தமான சொத்து :- திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் பள்ளிப்பட்டு சார்பதிவாளர் எல்லைக்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுகா, எண்.11, பொதட்டூர் குரூப், பொதட்டூர்பேட்டை கிராமம், தங்கரோடு தெருவில் அமைந்துள்ள, பழைய சர்வே எண். 97/18, பட்டா எண்.436-ன்படி புதிய சர்வே எண். 97/18A3, இதன் புதிய உட்பிரிவு சர்வே எண். 97/18A3A-ல் அடங்கிய, மொத்தமுள்ள 3375 சதுர அடியில் 1845 சதுர அடி பரப்பளவிலான கட்டிடம் மற்றும் வீட்டு மனையின் அனைத்து பகுதிகளும் பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டது. எல்லைகள்: வடக்கில் - கிருஷ்ணமூர்த்தி மற்றும் பாலனுக்கு சொந்தமான வீடு, தெற்கில் - தங்கரோடு தெரு, கிழக்கில் - திருமதி. டி. ஜி. ராணிக்கு சொந்தமான வீடு, மேற்கில் - திருமதி. தஞ்சம்மாளுக்கு சொந்தமான வீடு. அளவீடுகள்: வடக்குப் புறத்தில் கிழக்கு-மேற்காக - 20'06" அடி, தெற்குப் புறத்தில் கிழக்கு-மேற்காக - 20'06" அடி, கிழக்குப் புறத்தில் வடக்கு-தெற்காக - 90'00" அடி, மேற்குப் புறத்தில் வடக்கு-தெற்காக - 90'00" அடி, ஆக மொத்தம் 1854 சதுர அடி.**(அடையாள சுவாதீனம்)**

நிர்ணய விலை: ரூ.99,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.9,90,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.1,00,000/-

E-ஏல நாளும் நேரமும்: **19-11-2026** அன்று முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 3 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்)
டேவணித்தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள்: **18-11-2026** (மாலை 05:30 மணி வரை), ஆய்வு நாள்: **10-11-2026 மற்றும் 11-11-2026** (காலை 10:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை)

1. ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் / ஏலதாரர்கள் அனைவரும் **https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction-notices** இணையத்தளங்களுக்கு வருகை புரியுமாறு அழைக்கப்படுகிறார்கள். E-ஏலம் குறித்த விவரங்கள், உதவி, நடைமுறை, இணைய வழிப் பயிற்சி ஆகியவற்றைப் பெற விருப்பமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **திரு. முகமது ரஹீஸ் - தொ.பே. எண்: 8124000030 / 6374845616, M/S. 4 குளோசியூர்; ரேகா, தொ.பே. எண் - 8142000062, மின்னஞ்சல்: CholaAuctionLAP@chola.murugappa.com.** 2. E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான கூடுதல் விவரங்களுக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் வருக: **https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction-notices.**

இது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழான சட்டப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பும் ஆகும்.

தேதி: 14-10-2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : காஞ்சிபுரம் — சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

Chola

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: ஏஎஸ்வி ஆதர்ஷ் டவர், 719, பதரி சாலை, ஆஃப், அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002.
தொடர்பு எண்: திரு. தியாகராஜன் - மொபைல் எண். 9940516215, திரு. சிவசண்முகம் - மொபைல் எண்.9962614785

அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)-இன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரருக்கு / கூட்டுக் கடன்தாரருக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்படும் அசையாச் சொத்துக்கள் இனி இங்கு **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** எனக் குறிப்பிடப்பட உள்ள **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **அடையாள/நேரடி** சுவாதீனம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கடனீட்டுச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் E-ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும். மேலும் இதன் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் இதற்காக https://bankauctions.in இணையத்தளத்தில் நாங்கள் பொது E-ஏலம் நடத்த உள்ளோம்.

1. கடன் கணக்கு எண்: HE01TVT00000034537 & HE01TVT00000051584; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர், அடமானதாரர்களின் பெயர்:** 1. லோகேஷ் சங்கர் (விண்ணப்பதாரர்) (சட்டப்பூர்வ வாரிசு மற்றும் காலஞ்சென்ற சங்கரின் மகன்), 2. குமாரி சங்கர் (இணை-விண்ணப்பதாரர்) (சட்டப்பூர்வ வாரிசு மற்றும் காலஞ்சென்ற சங்கரின் மனைவி), 3. ரேகா சங்கர் (இணை-விண்ணப்பதாரர்) (சட்டப்பூர்வ வாரிசு மற்றும் காலஞ்சென்ற சங்கரின் மகள்), 4. ஈவிஜி (EVG) பவுண்டேஷன் (இதன் உரிமையாளர் லோகேஷ் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது), ஆகிய அனைவரும் வசிக்கும் முகவரி: மனை எண். 65A, 2வது தெரு, கௌரி அவென்யூ, அனகாபுத்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 600 070.; **பிரிவு 13(2)-ன் கீழான கோரிக்கை அறிவிப்பின்படியான தேதி மற்றும் தொகை:** 09-09-2025 மற்றும் 09-09-2025 தேதியின்படி ரூ.43,62,412/- ; **சொத்தின்/சொத்துக்களின் விவரங்கள் :** திருமதி. குமாரி (இணை-விண்ணப்பதாரர்) அவர்களுக்குச் சொந்தமான சொத்து:- காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, அனகாபுத்தூர் கிராமம், "கௌரி அவென்யூ"வில் (லேஅவுட் ஒப்புதல் எண். L.P.D.M/D.T.P.349/1973) அமைந்துள்ள மனை எண். 65 (பகுதி)-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் கிழக்குப் பகுதியின் அனைத்து நிலப்பரப்பும், பழைய சர்வே எண். 132/1, பட்டா எண். 10017, புதிய பட்டா சர்வே எண். 132/69-ன்படி 2000 சதுர அடி பரப்பளவு கொண்டு, பம்மல் சார்-பதிவாளர் மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்ட இந்த நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கே: மனை எண். 66, தெற்கே: 20 அடி சாலை, கிழக்கே: 20 அடி சாலை, மேற்கே: மனை எண். 65-ன் மேற்குப் பகுதி, இதில் அளவீடுகள்: வடக்குப் பக்கம்: 50 அடி, தெற்குப் பக்கம்: 50 அடி, கிழக்குப் பக்கம்: 40 அடி, மேற்குப் பக்கம்: 40 அடி, ஆக மொத்தம் 2000 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம். (அடையாள சுவாதீனம்).

நிர்ணய விலை: ரூ.60,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.6,00,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.1,00,000/-

2. கடன் கணக்கு எண்: HE01NAI00000052523; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர், அடமானதாரர்களின் பெயர்:** 1. எம் சங்கர் (விண்ணப்பதாரர்), 2. எஸ் ரமாதேவி (இணை-விண்ணப்பதாரர்), இருவரும் வசிக்கும் முகவரி: கதவு எண் 1/5B, ஈ.வி.ஆர் 1-வது தெரு, ஜிகேஎம் காலனி, பெரம்பூர், சென்னை - 600082 மற்றும் மனை எண். 6, பிளாட் எண். S3, இரண்டாம் தளம், வத்சா இன்ஃப்ராஸ், ஆனந்தம் நகர் மெயின் ரோடு, சோழிங்கநல்லூர், சென்னை - 600119 மற்றும் மனை எண். 6, பிளாட் எண். F3, முதல் தளம், வத்சா இன்ஃப்ராஸ், ஆனந்தம் நகர் மெயின் ரோடு, சோழிங்கநல்லூர், சென்னை - 600119 மற்றும் மனை எண். 6, பிளாட் எண். F1, முதல் தளம், வத்சா இன்ஃப்ராஸ், ஆனந்தம் நகர் மெயின் ரோடு, சோழிங்கநல்லூர், சென்னை - 600119, 3. ஸ்விஸ்டெக் ஈகோபாலி எண்டர்பிரைசஸ் (இணை-விண்ணப்பதாரர்), கதவு எண் 1/5B, ஈ.வி.ஆர் 1-வது தெரு, ஜிகேஎம் காலனி, பெரம்பூர், சென்னை - 600082.; **பிரிவு 13(2)-ன் கீழான கோரிக்கை அறிவிப்பின்படியான தேதி மற்றும் தொகை:** 09-04-2025 மற்றும் 09-04-2025 அன்றைய நிலவரப்படி ரூ.59,21,389/-; **சொத்தின்/சொத்துக்களின் விவரங்கள் : அட்டவணை - A** திருமதி. எஸ். ரமாதேவிக்கு சொந்தமான சொத்து:- அயிட்டம் எண். I முன்பு காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, தற்போது சோழிங்கநல்லூர் தாலுகா, எண். 189, புதிய எண். 155, சோழிங்கநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.326/2 பகுதி, பட்டா எண்கள்.3126 மற்றும் 5527-ன்படி புதிய சர்வே எண்.326/9-ல் அடங்கிய, ஆனந்தம் நகர், மனை எண்.6-ன் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள 1450 சதுர அடி (1500 - 50 சதுர அடி ஸ்ப்ளே (splay), ஆவணத்தின்படி 1488 சதுர அடி) பரப்பளவிலான காலி நிலத்தின் அனைத்து பகுதிகளும். மற்றும் இந்த நிலத்திற்கான எல்லைகள்: வடக்கில் - மனை எண்.6-ன் வடக்குப் பகுதி, தெற்கில் - 30 அடி சாலை, கிழக்கில் - 24 அடி சாலை, மேற்கில் - மனை எண்.5. அளவீடுகள்: வடக்குப் புறத்தில் 40 அடி, தெற்குப் புறத்தில் 40 அடி, கிழக்குப் புறத்தில் 40 அடி, மேற்குப் புறத்தில் 35 அடி. அயிட்டம் எண். II முன்பு காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, தற்போது சோழிங்கநல்லூர் தாலுகா, எண். 189, புதிய எண். 155, சோழிங்கநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.326/2 பகுதி, பட்டா எண்கள்.3126 மற்றும் 5527-ன்படி புதிய சர்வே எண்.326/9-ல் அடங்கிய, ஆனந்தம் நகர், மனை எண்.6-ன் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள 1200 சதுர அடி பரப்பளவிலான காலி நிலத்தின் அனைத்து பகுதிகளும். மற்றும் இந்த நிலத்திற்கான எல்லைகள்: வடக்கில் - மனை எண். 15, தெற்கில் - மனை எண்.6-ன் தெற்குப் பகுதி, கிழக்கில் - 24 அடி சாலை, மேற்கில் - மனை எண்.5. அளவீடுகள்: வடக்குப் புறத்தில் 40 அடி, தெற்குப் புறத்தில் 40 அடி, கிழக்குப் புறத்தில் 30 அடி, மேற்குப் புறத்தில் 30 அடி. இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவாளர் எல்லைக்குட்பட்டு அமைந்துள்ளது.

அட்டவணை - B சொத்து 1: அட்டவணை - ஏ-ல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ள மொத்தப் பரப்பளவான 2688 சதுர அடியிலிருந்து 438 சதுர அடி பிரிக்கப்படாத நிலத்தின் பங்கு. முதல் தளத்தில் அமைந்துள்ள (பொதுவான பகுதிகள் உட்பட) 1035 சதுர அடி பரப்பளவைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு (Flat) எண். Fl, மற்றும் அட்டவணை - ஏ-ல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள அனைத்து பகுதிகளும்.

நிர்ணய விலை: ரூ.26,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.2,60,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.50,000/-

அட்டவணை - A: திருமதி. எஸ். ரமாதேவி அவர்களுக்குச் சொந்தமான சொத்து:- அயிட்டம் எண். I : காஞ்சிபுரம் மாவட்டம், முன்பு தாம்பரம் வட்டம், தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், சோழிங்கநல்லூர் கிராமம், எண். 189, புதிய எண். 155, சர்வே எண். 326/2 பகுதி, பட்டா எண்கள் 3126 மற்றும் 5527-ன்படி புதிய சர்வே எண். 326/9-ல் அடங்கிய, ஆனந்தம் நகர், மனை எண். 6-ன் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள 1450 சதுர அடி (1500 - 50 சதுர அடி மூலை வளைவு) (பத்திரத்தின்படி 1488 சதுர அடி) அளவுள்ள காலி மனையின் அனைத்துப் பகுதிகளும் மற்றும் அதன் எல்லைகளாவன: வடக்கு : மனை எண் 6-ன் வடக்குப் பகுதி, தெற்கு : 30 அடி சாலை, கிழக்கு : 24 அடி சாலை, மேற்கு : மனை எண் 5, அளவுகள்: வடக்கு : 40 அடி, தெற்கு : 40 அடி, கிழக்கு : 40 அடி, மேற்கு : 35 அடி. அயிட்டம் எண். II : காஞ்சிபுரம் மாவட்டம், முன்பு தாம்பரம் வட்டம், தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், சோழிங்கநல்லூர் கிராமம், எண். 189, புதிய எண். 155, சர்வே எண். 326/2 பகுதி, பட்டா எண்கள் 3126 மற்றும் 5527-ன்படி புதிய சர்வே எண். 326/9-ல் அடங்கிய, ஆனந்தம் நகர், மனை எண். 6-ன் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள 1200 சதுர அடி அளவுள்ள காலி மனையின் அனைத்துப் பகுதிகளும் மற்றும் அதன் எல்லைகளாவன: வடக்கு : மனை எண் 15, தெற்கு : மனை எண் 6-ன் தெற்குப் பகுதி, கிழக்கு : 24 அடி சாலை, மேற்கு : மனை எண் 5, அளவுகள்: வடக்கு : 40 அடி, தெற்கு : 40 அடி, கிழக்கு : 30 அடி, மேற்கு : 30 அடி. இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவக மாவட்டத்திற்கு உட்பட்டது. **அட்டவணை - B: சொத்து 2:** அட்டவணை A-யில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள மொத்தப் பரப்பளவான 2688 சதுர அடியில் இருந்து 308 சதுர அடி பிரிக்கப்படாத பாகம் (Undivided share). மற்றும் அட்டவணை ஏ-யில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள, இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள 752 சதுர அடி பரப்பளவு கொண்ட (பொதுப் பகுதி உட்பட) பிளாட் (Flat) எண். S3.

நிர்ணய விலை: ரூ.19,50,000/- முன் வைப்புத் தொகை : ரூ.1,95,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.50,000/-

அட்டவணை - A : திருமதி. எஸ். ரமாதேவி அவர்களுக்குச் சொந்தமான சொத்து:- அயிட்டம் எண். I : காஞ்சிபுரம் மாவட்டம், முன்பு தாம்பரம் வட்டம், தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், சோழிங்கநல்லூர் கிராமம், எண். 189, புதிய எண். 155, சர்வே எண். 326/2 பகுதி, பட்டா எண்கள் 3126 மற்றும் 5527-ன்படி புதிய சர்வே எண். 326/9-ல் அடங்கிய, ஆனந்தம் நகர், மனை எண். 6-ன் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள 1450 சதுர அடி (1500 - 50 சதுர அடி மூலை வளைவு) (பத்திரத்தின்படி 1488 சதுர அடி) அளவுள்ள காலி மனையின் அனைத்துப் பகுதிகளும் மற்றும் அதன் எல்லைகளாவன: வடக்கு : மனை எண் 6-ன் வடக்குப் பகுதி, தெற்கு : 30 அடி சாலை, கிழக்கு : 24 அடி சாலை, மேற்கு : மனை எண் 5, அளவுகள்: வடக்கு : 40 அடி, தெற்கு : 40 அடி, கிழக்கு : 40 அடி, மேற்கு : 35 அடி. அயிட்டம் எண். II : காஞ்சிபுரம் மாவட்டம், முன்பு தாம்பரம் வட்டம், தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், சோழிங்கநல்லூர் கிராமம், எண். 189, புதிய எண். 155, சர்வே எண். 326/2 பகுதி, பட்டா எண்கள் 3126 மற்றும் 5527-ன்படி புதிய சர்வே எண். 326/9-ல் அடங்கிய, ஆனந்தம் நகர், மனை எண். 6-ன் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள 1200 சதுர அடி அளவுள்ள காலி மனையின் அனைத்துப் பகுதிகளும் மற்றும் அதன் எல்லைகளாவன: வடக்கு : மனை எண் 15, தெற்கு : மனை எண் 6-ன் தெற்குப் பகுதி, கிழக்கு : 24 அடி சாலை, மேற்கு : மனை எண் 5, அளவுகள்: வடக்கு : 40 அடி, தெற்கு : 40 அடி, கிழக்கு : 30 அடி, மேற்கு : 30 அடி. இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவக மாவட்டத்திற்கு உட்பட்டது. **அட்டவணை - B : சொத்து 3:** அட்டவணை A-யில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள மொத்தப் பரப்பளவான 2688 சதுர அடியில் இருந்து 308 சதுர அடி பிரிக்கப்படாத பாகம் (Undivided share) மற்றும் அட்டவணை ஏ-யில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள, முதல் தளத்தில் அமைந்துள்ள 752 சதுர அடி பரப்பளவு கொண்ட (பொதுப் பகுதி உட்பட) பிளாட் (Flat) எண். F3. **(நேரடி சுவாதீனம்)**

நிர்ணய விலை: ரூ.19,50,000/- முன் வைப்புத் தொகை : ரூ.1,95,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.50,000/-

E-ஏல நாளும் நேரமும்: **06-11-2026** அன்று முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 3 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்)
டேவணித்தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள்: **05-11-2026** (மாலை 05:30 மணி வரை), ஆய்வு நாள்: **29-10-2026 மற்றும் 30-10-2026** (காலை 10:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை)

1. ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் / ஏலதாரர்கள் அனைவரும் **https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction-notices** இணையத்தளங்களுக்கு வருகை புரியுமாறு அழைக்கப்படுகிறார்கள். E-ஏலம் குறித்த விவரங்கள், உதவி, நடைமுறை, இணைய வழிப் பயிற்சி ஆகியவற்றைப் பெற விருப்பமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **திரு. முகமது ரஹீஸ் - தொ.பே. எண்: 8124000030 / 6374845616, M/S. 4 குளோசியூர்; ரேகா, தொ.பே. எண் - 8142000062, மின்னஞ்சல்: CholaAuctionLAP@chola.murugappa.com.** 2. E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான கூடுதல் விவரங்களுக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் வருக: **https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction-notices.**

இது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)-இன் கீழான சட்டப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பும் ஆகும்.

தேதி: 14-10-2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சென்னை — சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

BAJAJ HOUSING FINANCE

பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க் B2 பில்டிங் 5வது தளம், கல்யாணி நகர், புனே, மஹாராஷ்ட்ரா-411 014 கிளை அலுவலகம்: தரை தளம், Chateaud Ampa, 37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 029

சுவாதீன அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(4) அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(1) ஆகியவற்றின் கீழ் (பிற்சேர்க்கை IV)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **M/s.பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (BHFL)** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் **கோரிக்கை அறிவிப்பினைக்** கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / கூட்டுக் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டிருந்த தொகையை அவ்வறிவிப்புக் கிடைத்த **60 நாட்களுக்குள்** திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் அத்தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால், கடன்தாரர்களுக்கும் / கூட்டுக் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) அதனுடன் மேற்கூறிய விதிகளுள் விதி 8(1) ஆகியவற்றின் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **M/s.பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின்** சார்பில் **நேரடி சுவாதீனம்** எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்கு / கூட்டுக் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், கீழ்க்காணும் சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அதன் எதிர்கால வட்டியுடன் BHFL நிறுவனத்துக்கு முதலுரிமை வகையில் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர் (கடன் கணக்கு எண்., கிளையின் பெயர்)	கடனீட்டுச் சொத்தின் விவரம் (அசையாச் சொத்து)	கோரிக்கை அறிவிப்பு நாளும் தொகையும்	நேரடி சுவாதீன நாள்
கிளை: சென்னை, LAN: H403HLT0545025, H403HLT0545026 மற்றும் H403HHL 0531821, 1. குமாரேசன் R D S @ R D S குமரேசன் (கடன்தாரர்) **முகவரி:** பழைய எண். AP 690 புதிய எண்.13, 25வது தெரு I பிளாக், அண்ணாநகர், திருவள்ளுவர் குடியிருப்பு, சென்னை, தமிழ்நாடு - 600040 **இன்னொரு முகவரி:** எண். 22H, லெச்சலெட், முதல் கட்டம், ராகவேந்திரா நகர், மேவலூர்க்குப்பம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர், சென்னை - 602025	**சொத்தின் அட்டவணை: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய விவசாயம் அல்லாத சொத்து அமைவிடம்:** செங்கல்பட்டு மாவட்டம் (முன்னர் காஞ்சிபுரம் மாவட்டம்), ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மேவலூர்குப்பம் கிராமம், "ராகவேந்திர நகர்" பகுதியில் அமைந்துள்ள புதிய சர்வே எண் 202/1c1-ல் அடங்கியதும், மொத்தம் 11,360 சதுர அடி பரப்பளவு கொண்ட மனைகள் (அதாவது, 2,880 சதுர அடி கொண்ட மனை எண் 21, 2,880 சதுர அடி கொண்ட மனை எண் 22, 2,800 சதுர அடி கொண்ட மனை எண் 29 மற்றும் 2,800 சதுர அடி கொண்ட மனை எண் 30) ஆகியவற்றில் 947 சதுர அடி பிரிபடா நில உரிமையுடன் கூடிய, "லெஷாலேட் ப்ராஜெக்ட்" என்று அழைக்கப்படும் 1,075 சதுர அடி கட்டப்பட்ட பரப்பளவு கொண்ட வீடு எண் 22-H; இதன் எல்லைகள்: **கிழக்கில்** மனை எண்கள் 23 & 28, **மேற்கில்** மனை எண்கள் 20 & 31, **வடக்கில்** சாலை, **தெற்கில்** சாலை. இது செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தின் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவு மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளது.	27.07.2026 அன்று ரூ.30,74,118/- (ரூபாய் முப்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து நூற்றி பதினெட்டு மட்டும்)	10-10-2026

நேரடி சுவாதீன நாள்: 10.10.2026, இடம்: சென்னை — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

SBI பாரத ஸ்டேட் வங்கி

குன்றத்தூர் கிளை

கோரிக்கை அறிவிப்பு

பெறுநர்
திரு. M பிரபாகர், பிளாட் எண்.79A, காஞ்சி காமாட்சி நகர், ஆதனூர், காஞ்சிபுரம், அஞ்சல் குறியீடு 603202.
சொத்து முகவரி: திரு. M பிரபாகர், பிளாட் எண்.79A, காஞ்சி காமாட்சி நகர், ஆதனூர், காஞ்சிபுரம், அஞ்சல் குறியீடு 603202.

இதன் மூலம் அளிக்கப்படும் ஓர் அறிவிப்பு யாதெனில், கீழ்க்காணும் கடன்தாரர்/ கள் **திரு. M பிரபாகர்,** வங்கியிடம் இருந்து பெற்ற கடன் வசதிக்கான அசலையும் வட்டியையும் திருப்பிச்செலுத்த தவறிவிட்டார். மேலும் அந்த கடன்கள் செயல்புரியா சொத்து (NPA) என பகுக்கப்பட்டுள்ளன. கடனீட்டு சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் கடனீட்டு சொத்துகள் மீதான உரிமை பாதுகாப்பு சட்டம் 2002-இன் பிரிவு 13(2)இன் கீழ் அவர்களுக்கு கடைசியாக தெரிந்த அவர்களது முகவரிக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. ஆனால் அவை பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்து விட்டன, எனவே இந்த பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்கு இங்கே அறிவிக்கப்படுகிறது.

வ எண்	கடன்தாரர் பெயர்	சொத்து விபரம்	அறிவிப்பு தேதி	NPA தேதி	நிலுவைத் தொகை
1	திரு. M பிரபாகர்	**அட்டவணை :** அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும்கொண்ட 1200 சதுர அடி காலி மனை அமைவிடம்: மனை எண் 79A (தெற்குப் பகுதி). இது 'காஞ்சி காமாட்சி நகர்' என்ற வீட்டுமனை லே அவுட்டில் அமைந்துள்ளது. நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் அலுவலகத்தால் 28.12.1982 நாளிடப்பட்ட எண் 6290/82 CRT-MAP-no CR/ DTCP/M-82-137/LP-8027/12-82 மூலம் அங்கீகரிக்கப்பட்டது. அமையப்பெற்ற சர்வே எண் 351-பட்டா எண் 1402-ன்படி உட்பிரிவு செய்யப்பட்ட புதிய சர்வே எண் 351/15 இது காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஆதனூர் கிராமத்தில் அமைந்துள்ளது. **இதன் எல்லைகள்:** வடக்கு - மனை எண் 79B, தெற்கு - மனை எண் 78, கிழக்கு - 30 அடி அகல சாலை, மேற்கு - மனை எண் 85. **அளவீடுகள்:** கிழமேல் வடக்கு பக்கம் 60 அடி,கிழமேல் தெற்கு பக்கம் 60 அடி, தென்வடல் மேற்கு பக்கம் 20 அடி, தென்வடல் கிழக்கு பக்கம் 20 அடி. இச்சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.	10.08.2026	03.08.2026	ரூ. 19,64,694/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபத்து நான்கு ஆயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) 10.08.2026 அன்றுள்ளபடி

அறிவிப்பின் மாற்று சேவைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட கடன்தாரர்கள் மற்றும் / அல்லது அவர்களது ஜாமீன்தாரர்கள் (எங்கு பொருந்துமோ அங்கு) இந்த அறிவிப்பு வெளியான 60 நாள்களுக்குள் நிலுவைத்தொகையை செலுத்துமாறு இதன்மூலம் கோரப்படுகிறார்கள் . தவறினால் 2002 ஆம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறு சீரமைப்பு மற்றும் கடனீட்டு சொத்துகள் மீதான உரிமை அமலாக்க சட்டத்தின் பிரிவு 13-இன் உட்பிரிவு (4)- இன் கீழ் இந்த அறிவிப்பு வெளியாகி 60 நாள்கள் முடிந்ததும் அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேதி: 10.08.2026 — அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம்: செங்கல்பட்டு — பாரத ஸ்டேட் வங்கி-க்காக

HDB FINANCIAL SERVICES — HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.

பதிவு அலுவலகம்: ராதிகா, 2-ஆவது தளம், லா கார்டன் சாலை, நவரங்க்புரா அஹமதாபாத்-09., கிளை அலுவலகம்: M/s.HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். பழைய எண்.64, புதிய எண்.84 MNO காம்ப்ளக்ஸ், 1ஆவது தளம், HDB டவர்ஸ், க்ரீம்ஸ் சாலை, சென்னை - 600006

மின்-ஏல விற்பனை அறிவிப்பு

(பெறுநர்: கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பரவலாக பொதுமக்கள்) (சர்ஃபாசி சட்டம் 2002, விதி 8(6) அதனுடன் விதி 9(1) ஆகியவற்றின் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.,** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி பின்வரும் சொத்தை கீழ்க்காணும் கடன் கணக்குகாக **"உள்ளது உள்ள இடத்தில் & உள்ளது உள்ளபடி"** எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் சுவாதீனம் செய்துள்ளார்.

1. விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: 1. **குட் நைட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்,** கிடங்கு எண் 3, எண் 4, 2ஆவது தெரு, லோட்டஸ் காலனி, தட்டான்குளம், மாதவரம், சென்னை - 600060, தமிழ்நாடு. **இன்னொரு முகவரி:** கதவு 4, முத்துமாரியம்மன் கோயில் தெரு, நாவலர் நகர், அண்ணா நகர் மேற்கு, சென்னை - 600040, 2. **உமா A,** பழைய எண் 467, புதிய எண் 12, 87ஆவது தெரு, முத்தமிழ் நகர், கொடுங்கையூர், சென்னை - 600118, தமிழ்நாடு. 3. **சஞ்சித் குமார் S,** எண் 35, 1ஆவது தளம், தாமோதரன் தெரு, ஜம்புலி புதிய காலனி, கொடுங்கையூர், சென்னை - 600118, தமிழ்நாடு, 4. **கார்த்திக் U,** பழைய எண் 467, புதிய எண் 12, 87ஆவது தெரு, முத்தமிழ் நகர், கொடுங்கையூர், சென்னை - 600118, தமிழ்நாடு, 5. **ராஜேஸ்வரி N,** எண் 22, சுந்தரம் பிரதான தெரு, வியாசர்பாடி, சென்னை - 600039, தமிழ்நாடு. **கடன் கணக்கு எண்கள்: 48084756. மொத்த நிலுவைத்தொகை: 13.10.2026 அன்றுள்ளபடி : ரூ.3,60,60,069.24/- (ரூபாய் மூன்று கோடியே அறுபது லட்சத்து அறுபதாயிரத்து அறுபத்தொன்பது ரூபாய் மற்றும் இருபத்து நான்கு பைசா மட்டும்)** அத்துடன் முழுத்தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான மேல் வட்டி / இடைநிகழ் செலவுகள் / செலவினங்கள்

ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குத் தெரிந்து ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின் அவற்றின் விவரங்கள்: --- ஏதும் இல்லை

அசையாச் சொத்து விபரங்கள்- கடனீட்டு சொத்துக்கள் அட்டவணை -I: அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட சொத்து : குடியிருப்பு வீடு. கதவு எண் 34 (பழைய எண் 10), முத்துமாரியம்மன் கோயில் தெரு, நாவலர் நகர், அண்ணா நகர் மேற்கு, சென்னை - 600 040, சர்வே எண் 162/2, நகர சர்வே கள நிலப்பதிவேட்டின்படி TS எண் 138, (பழைய சர்வே எண் 162/2 பாகம், 196 பாகம்), பிளாக்: 0036, வார்டு: 001, வில்லிவாக்கம் கிராமம், பரப்பளவு 1779.5 சதுர அடி (992 சதுர அடி + 787.5 சதுர அடி) கொண்ட நிலம் மற்றும் தரைத்தளத்துடன் கூடிய கட்டடம் மொத்தக் கட்டுமானப்பரப்பளவு ஏறக்குறைய 1200 சதுர அடி . இது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார்பதிவு மாவட்டம், தற்போது சென்னை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைகளுக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** TNHB வீடுகள், **தெற்கு:** முத்துமாரியம்மன் கோயில் தெரு (நாவலர் நகர்), **கிழக்கு:** புதிய கதவு எண் 32 (பழைய எண் 9) கொண்ட வீடு, **மேற்கு:** புதிய கதவு எண் 36 (பழைய எண் 11) கொண்ட வீடு

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை	ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித்தொகை செலுத்த கடைசி நாள் மற்றும் நேரம்
ரூ.3,49,43,030/-	ரூ.34,94,303/-	ரூ.1,00,000/-	18.11.2026 அன்று அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	17.11.2026 மாலை 05.00 மணிவரை

ஏல விற்பனையுடன் கூடிய ஒப்பந்தப்புள்ளியின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏல விற்பனையானது **'இணைய வழி மின்-ஏல' முறையில் https://www.bankeauctions.com இணையத்தளத்தில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில் எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும். 2.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் **https://www.bankeauctions.com** இணையத் தளத்தில் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி டேவணித்தொகையைச் செலுத்தலாம் (**https://www.bankeauctions.com** இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையைக் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% எனும் அளவில் "HDB Financial Service Limited" எனும் பெயரிலான செலுத்தாணை (Order) / கேட்பு வரைவோலை (DD) வடிவில் செலுத்த வேண்டும். இணையத் தளத்தில் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாளுக்கும் நேரத்துக்கும் முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணையத் தளத்தில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு நகல் அல்லது கேட்பு வரைவோலை, ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று [வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்] அஃதாவது கடவுச்சீட்டு / வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல். இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இவை தவிர, பின்னிணைப்பு-II & III ஆகியவற்றின் (இவற்றை **https://www.bankeauctions.com** இணையத் தளத்தில் தரவிறக்கிக் கொள்ளலாம்) ஒளிவருடல் நகல்களை (scanned copies) முறையாக நிரப்பிக் கையொப்பமிட்டுப் பதிவேற்றுவதும்கூட அவசியமாகும். பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் போன்றவற்றுக்கு உதவி தேவைப்படின் மற்றும் இணைய வழி உள் ஏலக்கோரலுக்கான பயிற்சி / செய்முறை விளக்கம் தேவைப்படுகிற ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **. M/s. C1 India Pvt Ltd., உத்யோக் விஹார், ஃபேஸ் 2, கல்ஃப் பெட்ரோகெம் பில்டிங், பிட்லிங் எண். 301, குர்கான், ஹரியாணா - 122 015 மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com உதவிக்கான எண்கள். 124-4302020 / 21 / 22 / 23, 72919 81124 / 1125 / 1126, விற்பனை விசாரணைகள்: மின்னஞ்சல் முகவரி - sales@bankeauctions.com, 72919 81129** 3. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலத்துக்கு நேரிடையாக வந்து தாங்களே தனிப்பட்ட முறையில் கலந்து கொள்வதோடு தாங்கள் தங்களுக்காகத்தான் ஏலத்தில் கலந்து கொள்வதாக எழுத்துப்பூர்வமாக பிரகடன அறிக்கை (declaration) தர வேண்டும். தன் சார்பாக அதிகாரப்பூர்வ நபரை அனுப்பி வைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. **4.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தைப் பெற அணுக வேண்டியவர்: அதிகாரப்பூர்வ அலுவலர் : **M/s. HDB ஃபைனான்சியல் HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., பழைய எண்.64, புதிய எண்.84 MNO காம்ப்ளக்ஸ், 1ஆவது தளம், HDB டவர்ஸ், க்ரீம்ஸ் சாலை, சென்னை-600006. ஏலம் நடைபெறும் இடம்: HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். பழைய எண்.64, புதிய எண்.84 MNO காம்ப்ளக்ஸ், 1ஆவது தளம், HDB டவர்ஸ், க்ரீம்ஸ் சாலை, சென்னை-600006. 5.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தை மட்டும் பயன்படுத்தி நிரப்பப்பட்ட தங்கள் ஏலப்புள்ளிகளை உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு அதிகாரப்பூர்வ அலுவலர், **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** என உறையின் மேல் எழுதி குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையை "HDB Financial Service Limited" என்ற பெயரில் செலுத்தத்தக்க செலுத்து ஆணை (PO) / கேட்பு வரைவோலை (DD) இணைத்து **17.11.2026 அன்று மாலை 05.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ** சமர்ப்பிக்க வேண்டும். **6,** சொத்து ஆய்வு மற்றும் இதர விவரங்களுக்கு ஆர்வமுள்ள ஏலதாரர் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: M/s. **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., பழைய எண்.64, புதிய எண்.84 MNO காம்ப்ளக்ஸ், 1ஆவது தளம், HDB டவர்ஸ், க்ரீம்ஸ் சாலை, சென்னை-600006. K.சண்முகம் (9597065780)& S கோபி (9884451533).** சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** எனும் நிபந்தனைகள் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **7.** இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் **18.11.2026 அன்று காலை 11:00** மணிக்குத் திறக்கப்படும். பொதுவாக ஏலமானது மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக நடைபெறும் என்றாலும்கூட, மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகையை விடக் கூடுதலாக ஏலம் கோர விரும்பும் ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கிடையே அதிகாரப்பூர்வ அலுவலர் தனது விருப்புரிமையின் பேரில் வெளிப்படையான ஏலத்தை நடத்தக்கூடும். அப்படி நடந்தால் அந்த நேரத்தில் உச்சபட்சத் தொகைக்கு ஏலம் கோருபவருக்கே விற்பனை முடிவு செய்யப்பெறும். எப்படி இருந்தாலும் விற்பனையானது **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெடின்** உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. **8.** வெற்றி பெறும் ஏலதாரர் விற்பனைத் தொகையில் 25%-ஐ (டேவணித்தொகை உட்பட) விற்பனை முடிந்த உடன் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு முன்னதாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 15 நாள்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால் முதலில் செலுத்தப்பட்ட 25% தொகை பறிமுதல் செய்யப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இது திருப்பித் தரப்படமாட்டாது. ஒருவேளை வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே குறிப்பிட்டபடி மொத்த விற்பனைத் தொகையின் 25%-ஐச் செலுத்தத் தவறினால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு விற்பனையை உறுதி செய்ய முடிவெடுக்கப்படும். **9.** இங்கே குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் விற்பனை விலை முழுமையாகப் பெறப்பட்ட பின்னரே விற்பனைச் சான்றிதழானது வெற்றி பெற்ற வாங்குநரின் பெயரில் அதிகாரப்பூர்வ அலுவலரால் வழங்கப்படும். **10.** பெயர் மாற்றத்துக்காகச் சட்டப்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் முதலான கட்டணங்கள் வெற்றி பெறும் வாங்குநரையே சாரும். **11.** சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைகளான (சட்டப்படியான வீட்டு வரி, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) வருமான வரி பிடித்தம் (TDS), சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஏதேனும் அரசுக்கு, அரசின் கீழான அமைப்புகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டியிருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரரே செலுத்த வேண்டும். **12.** எந்தக் காரணமும் சொல்லாமல், ஏலப்புள்ளியையோ ஒப்பந்தப்புள்ளியையோ எந்த ஒரு விலைகோரலையுமோ அனைத்து விலைகோரல்களையுமோ ஏற்க அல்லது தள்ளுபடி செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க / ஒத்தி வைக்க / ரத்து செய்யவும், எந்தக் காரணமும் சொல்லாமல் விற்பனையின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மாற்றவும் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

இடம்: சென்னை, நாள்: 14.10.2026 — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம்-III சென்னை முன்பாக

O.A. No: 36 of 2026

[illegible] ...விண்ணப்பதாரர்

எதிர்

[illegible] ...பிரதிவாதி

To

[illegible]

மாற்று சேவை மூலம் பிரதிவாதிக்கு சம்மன்

[illegible] 02.12.2026 [illegible] 11.15 [illegible]

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் — இளமை! புதுமை! இனிமை!